Registered No. M. 5068

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ சித்திரைமீ 28உ 10—5—1948 ஹிஜிரி 1367 ஜமாதிலாஹர்மீ 30உ திங்கட்கிழமை. } இதழ் 16

ஜமீயத்துல் உலமா 15-வது கூட்டம்.

ஷைகுல் ஹிந்த் மௌலானா மதனியின் அறிவுரை.

பம்பாய்—26, ஏப்ரல்.

ஜமீயத்துல் உலமாவின் 15-வது வருஷாந்திரக் கூட்டம் பம்பாய் சென்ட்ரலுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த 'மதனி நகர்' பந்தலில் ஆரம்பமாயிற்று. ஷைகுல் ஹிந்த் மௌலானா ஹுஸைன் அஹமத் மதனி தலைமை வகித்தார். பந்தலின் மூவர்ணக் கேட்டுக்கு எதிரே யூனியன், ஜமீயத் கொடிகளும் பந்தலுக்குள் நடுவே மூவர்ணக் கொடியும் பறந்துகொண்டிருந்தன.

மேடையின்மீது ஒருபுரம் தேசீயக்கொடியும், இன்னொருபுரம் ஜமீயத் கொடியும் பறந்தன. வெள்ளை கருப்புக்கோடுகளைக் கொண்ட ஜமீயத் கொடியின் நடுவே 'நீதி' என்று சிவப்பு நிறத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. ஜனங்கள் 6½- மணியிலிருந்தே பெரும் திரளாகவர ஆரம்பித்துவிட்டனர்.

மௌலானுக்கள் ஹபீபுர் ரஹ்மான் சாஹிப், ஹிப்சுர் ரஹ்மான், அப்துல் ஹக் மதனி, அப்துல் அலீம், அப்துல் மாஜித், நஜீர் சாஹிப், சையத்மஹ்தீ ஹஸ்ஸன், முகம்மத்தையிப் உள்பட, ஏராளமான உலமாக்கள் கலந்துகொண்டனர். ஹிந்து சகோதரர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். பெண்களுக்காக தனிப்பந்தல் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. 50,000 (ஐம்பது ஆயிரம்) பேருக்குமேல் ஜனங்கள் கூடினர்.

நேரு- ஆஸாத் வருகை.

எட்டடிக்க பத்து நிமிஷம் இருக்கையில் இந்திய சர்க்கார் கல்வி மந்திரி இமாமுல் ஹிந்த் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் கூட்டத்திற்கு வந்தார். சிறிது நேரத்திற்குள் பந்தலுக்கு வெளியே 'பண்டிட்ஜி-கி ஜே!' என்றகோஷங்கள் வானைப்பிளந்தன. சரியாக 8-மணிக்கு இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு பந்தலுக்குள் நுழைந்தார் அவருடன் மிஸ்டர் S- K· பட்டீல், மிஸ்டர் சலீம் முதலிய காங்கிரஸ் ஹிந்து, முஸ்லிம்கள் கூட்டத்திற்கு வந்தனர். பண்டித நேருவைப் பார்த்தவுடன் "நேரு சர்க்கார் ஜிந்தாபாத், தேசீய சர்க்கார் ஜிந்தாபாத், பண்டிதநேரு ஜிந்தாபாத்" என்று ஜனங்கள் ஆரவாரம் செய்தனர். மௌலானா ஆஸாத், பண்டித நேரு சொற்பொழிவுகளுக்குப் பிறகு வரவேற்புக் கமிட்டித் தலைவர் மௌலானா மஹ்தீ ஹஸ்ஸன் சுருக்கமாகத் தலைவர்களை வரவேற்றுப் பேசுகையில், "லட்சக் கணக்கான மக்கள் துன்புற்று அலைவதும் ஊர் ஊராக ஓடினும் ஒண்ட இடம் கிடைக்காமல் இருப்பதும் வகுப்புவாத அரசியலின் பலனேயாகும்." என்று குறிப்பிட்டார்.

மௌலானா அஹ்மத் ஸையீத் தலைவர் பெயரைப் பிரேரேபித்தார். மௌலானா மதனியின் அரியசேவைகளைச் சுருக்கமாகப் பாராட்டிய பிறகு "சுதந்திரப் போராட்ட காலத்திலும் மௌலானா மதனி நமக்கு வழிகாட்டினர். சுதந்திரமடைந்த பிறகு நிர்மாண வேலைகள் துவங்கவிருக்கும் இந்த சமயத்திலும் அவரைவிட சிறந்த வழிகாட்டி வேறு எவருமில்லை. மதக்கல்வியில் பாண்டித்தியம் பெற்றிருப்பதுடன் அரசியல் அரங்கத்தின் வீரராகவும் இருக்கின்றார். அவர் காட்டும் வழியில் நம் அனைவருக்கும் பூரண விசுவாசம் உண்டு.

இந்த நாட்டை தங்கள் நாடென நினைக்காமல் அன்னிய நாட்டிடம் அனுதாபம் கொண்டிருப்பவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி விடுவதுதான் சரி. தரை, ஆகாயம், கடல் மார்க்கங்கள் எல்லாம் அவர்களுக்காக திறந்திருக்கின்றன. இந்தியாவைத் தாயகம் என்று நினைப்பவர்கள் சந்தோஷமாக இங்கு வாழலாம். இச்சமயத்தில் நான் வேண்டுமென்றே விசுவாசம் என்ற வார்த்தை உபயோகிக்கவில்லை. தங்கள் நாட்டில் தங்கள் சர்க்கார் இருக்கையில் யார் முன்னிலையில் விசுவாசப் பிரமாணம் எடுப்பது! ஏதாவதொரு அன்னிய நாட்டுடன் விவகாரம் ஏற்படும்போதுதான் விசுவாசம், அவிசுவாசம் என்ற பிரச்னை எழ முடியும்.

எங்களை எங்கள் போக்கிலே விட்டுவிடுங்கள். என்று இந்திய டொமினியனுக்கு வெளியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொல்லுகிறேன். நாலரை கோடி இந்திய முஸ்லிம் பலிக் கிடாக்களைக் குறித்து கவலைப்படாமல் இஸ்லாமிய ராஜ்யம் முதலில் தன்னைப்பற்றி கவலைப்படட்டும். அங்குள்ள சிறுபான்மையினரை பாகிஸ்தான் பாதுகாக்குமா ?

பாகிஸ்தானில் முஸ்லிம்கள் வாழ்வதும் கஷ்டமாயிருக்கையில் இந்திய மைனரிடி முஸ்லிம்களைக் குறித்து கவலைப்படுவானேன் பல வருஷங்கள் 'பாகிஸதான் ஜிந்தாபாத்' என்று கோஷித்து வந்த அதே முஸ்லிம்கள் இன்று பாகிஸ்தான் முர்தாபாத்' என்று கோஷித்துக்கொண்டு இந்தியாவுக்கு திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். பாகிஸ்தானில் அவர்கள் ஈவிரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டதற்கு உவமையே இல்லை. நான் குறை கூறவில்லை. ஆனல் உண்மையை எடுத்துச் சொல்லுகின்றேன். முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அழிந்து நிம்மதி இழந்து இருப்பவர்களின் மனதைப் புண்படுத்துவதும் அவர்களை விரோதிப்பதும் ஒன்றேயாகும் இந்திய முஸல்மான்களாகிய நாங்கள் மைனரிடியாக இருப்பதைக்குறித்து கவலைப்படவேண்டியதில்லை சமூகத்தின் உயர்வும், தாழ்வும் சமூகத்தினரின் எண்ணிக்கையைப் பொருத்ததல்ல. நேர்மை, ஒழுக்கம், நடத்தையைப் பொருத்தே இருக்கிறது.

முஸலிம்களின் ஆட்சி.

முஸ்லிம்கள் ஆட்சி இந்தியாவில் இருந்ததற்கு அவர்கள் மெஜாரிடியாக இருந்தது காரணமல்ல. அவர்களில் விழிப்பு, ஒற்றுமை, ஒழுக்கம், நேர்மை, மத அறிவு இருந்தது. முஸ்லிம்கள் தங்களுடைய அந்தஸ்தை மறந்துவிடக் கூடாது. நாட்டுக்கு அவர்கள் தேவை. இதற்குமுன் இருந்ததைப் போலவே இன்றைக்கும் அவர்களுக்கு மதிப்பு இருந்து வருகின்றது. அடுத்த தேர்தலில் முஸ்லிம்களுக்கு தங்களுடைய உண்மையான மதிப்பு தெரிந்துவிடும். பம்பாயில் நடந்திருப்பதை உதாரணமாகக்கொண்டு பார்த்தாலே தெரியும். காங்கிரஸ்காரர்கள் முஸ்லிம் லீக் காரர்களைத் தங்களுடைய கட்சியில் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். மாகாண சர்க்காரின் இவ் விதப்போக்கு தவருனது. சந்தர்ப்ப வாதத்தையே அது காட்டுகின்றது, என்பது உண்மையாயினும் சர்க்கார் மீது குறை கூறவேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல.

மௌலானு முஹமத் தையிப், மௌலானு நூருத்தீன் பிஹாரி, மௌலானு மஹ்பூல் அஹமத் முதலியோர் ஆமோதித்தனர். வானைப்பிளக்கும் கோஷங்களிடையே மௌலானு ஹுஸைன் அஹமத் மதனியின் தலைமைப் பிரசங்கம் ஆரம்பமாயிற்று.

மௌலானு மதனி முன்னுரை

தலைமைப் பொருப்பிலிருந்து, இவ்வருஷமாவது விடுபட்டு, முழுநேரத்தையும் கல்வித்துறையில் சிலவழிக்க எண்ணினேன் என்னுடைய ஆசை பூர்த்தியாக வில்லை. மீண்டும் பொறுப்பை சுமத்திவிட்டீர்கள். அதற்காக குறை கூறுவதா, அல்லது, நன்றி செலுத்துவதா என்பது தான் தோன்றவில்லை, இருப்பினும் பொறுப்பைச் சுமத்தி கௌரவித்தமைக்கு நன்றி அறிவிக்கின்றேன்,

கடவுள் கிருபையால் நமக்குள் திறமை, தகுதியுள்ளவர்கள் அநேகர் இருக்கின்றனர். கடமையைச் செய்ய அவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்.

சஹரான்பூருக்குப் பிறகு, மீண்டும் பம்பாயில் நாம் கூடுகிறோம். இரண்டு ஊர்களுக்கும் உள்ள தூரத்தைவிட நிலைமை, வெகுவாக மாறுதலடைந்துவிட்டது. ஒரு நூற்றாண்டில் நிகழ வேண்டிய காரியங்கள் இரண்டே வருஷங்களுக்குள் சம்பவித்துவிட்டன.

தாய்நாட்டு விடுதலை

சஹரான்பூரில் கூடிய போது' அடிமைத்தனம் நம்மீது சுமத்தப்பட்டிருந்தது. நம்முடைய கட்டிடங்கள் மீது யூனியன் ஜாக் பறந்து கொண்டிருந்தது. உலக மகா யுத்தம் முடிவடைந்து, பிரிட்டன், வெற்றிவிழா கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது. இந்தியாவைப் பொறுத்தவரை பிரிட்டன் வெற்றி தோல்வியாகவே மாறியிருக்கின்றது. இன்று பிரிட்டனின் ஆதிக்க வலை சுருண்டு யூனியன் ஜாக் இந்தியக்கட்டிடங்களை விட்டு இறக்கப்பட்டுவிட்டது.

இவ்வித புரட்சி எல்லையற்ற மகிழ்ச்சியை கொடுத்திருக்கின்றது ஆயினும் புரட்சி வேகத்தில் நடந்தேறிய சம்பவங்கள் நம் உற்சாகத்தை குறைத்திருப்பதுடன் இந்தியாவின் பிரகாசமான பெயருக்கு களங்கத்தையும் உண்டு பண்ணிவிட்டன.

இந்தியாவுக்கு ஏற்பட்டு விட்ட களங்கத்தை அகற்றி இழந்துவிட்ட உற்சாகத்தை மீண்டும் பெற நாம் துடித்துக்கொண்டிருக்கின்றோம். அந்தக் கட்டத்தை அடையும் போது பழைய ஏடுகளை பிறட்டிப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. சஹரன்பூரில் கூடியபோது நம்முடைய உள்ளங்களில் இந்திய சுதந்திர உணர்ச்சியும் மூளைகளில் சுதந்திர இந்தியாவின் எண்ணமும் குடிகொண்டிருந்தது ஆனால் தனித் தொகுதியும் இருசமுதாயக் கொள்கையும் பல்வேறு வகுப்பாரின் நலன் பற்றிய பிரச்னையை சிக்கலாக்கி வைத்திருந்தது.

இரு சமுதாயக் கொள்கை

பிரிட்டிஷ் பிரித்தாளும் சூழ்ச்சியின் விளைவாக ஏற்பட்ட வேற்றுமை "ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனி சமுதாயங்கள். இருவருக்கும் தனித் தாயகங்கள் தேவை. ஹிந்து இந்தியா, முஸ்லிம் இந்தியா என்று தாய்நாடு இரண்டாக கூறுபோடப் பட வேண்டும்." என்ற கோரிக்கையின் ரூபத்தில் வெளிவந்திருந்தது.

இந்த குதர்க்க வாதத்தை ஜமீயத் என்றுமே ஒப்புக் கொண்டதில்லை. பொருளாதாரம், தொழில், கலை, நடை, உடை, பாவனை, பாஷை முதலிய எல்லாத் துறைகளிலும் ஒன்றுபட்ட மக்களை இரண்டு சமுதாயங்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? தவிர உலமாக்கள் எல்லாப் பிரச்னைகளிலும் திருகுர்ஆன் அளிக்கும் தீர்ப்பையே அனுசரித்து நடந்து வருகின்றனர். குர்ஆனில் இரு நூற்றுக்கும் அதிகமான இடங்களில் சமுதாயம் என்ற வார்த்தை வருகின்றது

ஒரு இடத்திலும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு சமுதாயம் நிர்ணயிக்கப்படவில்லை. அதற்கு மாருக ஆண்டவனல் மக்களின் வழிக்காட்டிகளாக அனுப்பப்பட்ட தீர்க்க தரிசிகள் தங்களுக்கு முட்டுக் கட்டையாக இருந்து பலவித துன்பங்கள் இழைத்து வந்தவர்களையும் தங்கள் சமுதாயத்தினர் என்றே சொல்லியிருக்கின்றனர். நபிமார்கள்பால் விசுவாசம் கொள்ளாதவர்களையும் நபிமார்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்என்றே ஆண்டவனும் சொல்லுகின்றார்

இன்னொரு புறம் உலமாக்கள் அரசியல் உலகத்தையும் அலசி பார்த்தனர். இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, எகிப்து முதலிய நாடுகளில் பொருளாதார, நாகரீகத்துறைகளில் பிணைக்கப்பட்டிருக்கும் மக்களின் மதம் வெவ்வேருக இருப்பினும் ஒரு நேஷன் அதாவது சமுதாயம் என்றே கருதப்படுகின்றனர். எனவே மத அடிப்படையிலும் சரி, இன்றைய அரசியல் அடிப்படையிலும் சரி ஹிந்து, முஸ்லிம்கள் தனி சமுதாயங்கள் என்ற வாதத்தை ஜமீயத்துல் உலமா ஒப்புக்கொள்ள முடியவில்லை.

ஜமீயத்துல் உலமா திட்டம்

ஜமீயத் இரு சமுதாயக் கொள்கையையோ அதன் பலனை தேசப் பிரிவினையையோ ஏற்க வில்லை. இயற்கைக்கு புறம்பான தென்றும், நாட்டிற்கு நாசத்தையே விளைவிக்கு மென்றும், எப்பொழுதுமே எதிர்த்தும் வந்திருக்கின்றது. ஆயினும் பல்வேறு வகுப்பாரின் கலாச்சார உரிமைகளுக்குப் பாதுகாப்பு அவசியம் என்பதை ஜமீயத் ஒப்புக்கொண்டிருந்தது. ஆகவே பாகிஸ்தான் யோஜனை விளக்கமாக வெளி வருவதற்கு முன்பே ஜமீயத் தன்னுடைய திட்டத்தை மக்கள்முன் சமர்ப்பித்திருந்தது. 1945-ல் ஸஹரன்பூரில் கூடிய ஜமீயத் கூட்டமும் அத்திட்டத்தை ஆதரித்தது.

இந்தியா ஆசியாவின் பலமான வழிகாட்டியாக அமையக்கூடிய வகையில் பலம் வாய்ந்த ஒரு மத்திய அரசாங்கமே ஜமீயத் திட்டத்தின் அடிப்படை லட்சியம்.

திட்டத்தின் இரண்டாவது விதிப்படி போக்கு வரத்து, பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை முதலியவைகளைத் தவிர எல்லாவித அதிகாரங்களுடன் மாகாணங்கள் சுதந்திரத்துடனும் மக்கள் திருப்தியுடனும் வாழ்வது சாத்தியமாய் இருந்திருக்கும்.

திட்டத்தின் மூன்ருவது விதி சிறுபான்மையோர் விஷயத்தில் பெரும்பான்மையோர் தலையிட முடியாத வகையில் மத்திய அரசாங்கம் அமைப்பதன் மூலம் மைனரிடியின் பயத்தை போக்கவழி செய்திருந்தது.

ஒரு சமூகத்தினரின் குறிப்பிட்ட பிரச்னையென்று அச்சமூகத்தைச் சேர்ந்த மெஜாரிடி மெம்பர்கள் முடிவு செய்து விட்ட பிறகு அப்பிரச்னை சட்ட சபையில் எழுப்பக் கூடாதென்றும், அபிப்பிராய பேதம் ஏற்படக் கூடிய பிரச்னைகள் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு விடப்பட வேண்டு மென்றும் திட்டத்தில் கண்டிருந்தது.

மேலும் மத்திய அரசாங்கத்தில் ஹிந்து முஸ்லிம் சரி சமப் பிரிதிநிதித்துவம் அதாவது 45% ஹிந்துக்கள் 45% முஸ்லிம்கள், 10% இதர மைனரிடிகள் இருக்க

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 10—5—'48 திங்கட்கிழமை { இதழ் 16

மே தினம்.

இம்மாதம் முதல் தேதி உலகம் பூராவிலுமுள்ள கிஸான்கள், தொழிலாளர்கள், பாட்டாளிகள், மே-தினத்தைக் கொண்டாடியிருப்பார்கள். இந்தியாவில் தேசீய அடிப்படையில் மே தினம் கொண்டாடப்பட்டது நம் தேசீய வாழ்க்கையிலேயே இதுதான் முதல் தடவையாகும். அடிமை இந்தியாவில் மே தினத்துடன் விவசாயி, தொழிலாளி, பாட்டாளி மக்களுக்கு துன்பங்களும் கூடவே வருவது வழக்கம். கைதுகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கும். பாட்டாளி வர்க்கம் உரிமைகளை கேட்டு வந்த ஒரே காரணத்துக்காக அநேக நிரபராதிகள் கொல்லப்பட்டுவந்தார்கள் இன்று நாட்டின் நிலைமை மாறிவிட்டது. புதிய சகாப்தத்தில் முதலாவது மே தினத்தை புதிய நோக்குடனும் நம்பிக்கையுடனும் பாட்டாளி வர்க்கம் வரவேற்றிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் கிஸாண், தொழிலாளி, பாட்டாளி மக்கள் பிரச்னையைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இரண்டு நூற்றுண்டுகளாக அடிமை இந்தியாவில் ஒடுக்கப்பட்டுக்கிடந்த வர்க்கத்தினருக்கு விமோசனம் அளிக்கக்கூடிய வழியைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட வேண்டும். தொழிலாளி, முதலாளி தகராறுகளால் எழும் பிரச்னைகள் தீர அதுவே சிறந்த வழியாக இருக்கும். பாட்டாளிவர்க்கம் தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காக போராட்டம் தொடர்ந்து நடத்த உறுதிகொள்ள வேண்டும். அவர்கள் அடையும் வெற்றி உலகசமாதானத்துக்கும் சுபிட்சத்துக்கும் அடிகோலக்கூடிய வகையில் போராட்டம் இருக்க வேண்டியதவசியம். மே தினம் ரஷ்யாவில் மட்டுமின்றி அமெரிக்கா, பிரிட்டனிலும் கொண்டாடப் படுகின்றது. அதுதான் மே தினத்தின் குறிப்பிடத்தக்க பொது அம்சம். உலகம் இரண்டு தொகுதிகளாக பிரிந்து வருகிறது, அல்லது பிரிந்துவிட்டது. ஆயினும் மேதினக் கொண்டாட்டத்தின் முக்கியத்வம்;பொருத்தவரை உலகத்தின் எந்தபாகத்திலுமுள்ள தொழிலாளியையும் ஏமாற்றிவிட முடியாது. ரஷ்ய, அமெரிக்க ஆதரவாளர்களின் நிலைமைக்கு இந்தியாவின் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். ரஷ்யாவை பொதுவுடமையின் வட துருவம் என்றால் அமெரிக்காவை முதலாளித்துவத்தின் தென் துருவம் என்றே சொல்லவேண்டும். இவ்விரு நாடுகளுக்கும் இந்திய நிலைமை முற்றிலும் வேறு. நாம் ஒரு சோஷலிஸ்டு குடியரசை நிர்மாணிக்கத் தீர்மானித்துவிட்டோம். அதில்எல்லா வர்க்கத்தினரும் அன்னியோன்யமாய் நண்பர்களாக வாழ்வார்கள். இந்தியர்கள் அனைவரும் ஒரே கப்பலின் கப்பலோட்டிகளாகவே தங்களை பாவிப்பார்கள். ஒரே கட்டிடத்தை நிர்மாணிக்கும் சிற்பிகளாக இருப்பார்கள். குடியரசின் முன்னேற்றம் தங்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பொருத்தேயிருக்கிறதென்பதை உணர்ந்து நடந்து கொள்ளுவார்கள்.தேசத்தின் நலனே அவர்களுக்கு பிரதானமாயிருக்கும். அவ்விதக்கொள்கையைமேற்கொள்வதன் மூலமே நம்முடைய துன்பங்களுக்கு நாம் பரிகாரம் செய்ய முடியும். தொழிற்சாலை முதலாளிகள், தொழிலாளிகளின் உழைப்புக்குத்தகுந்த ஊதியம் கொடுக்க முன்வரவெண்டும். அப்படிச் செய்யத் தயாராயில்லா விட்டால் அவர்கள் தேசத்துரோகிகளாகவே இருக்கமுடியும். அதைப்போலவே தேசத்தின் நலனை அலட்சியம் செய்துவிட்டு அந்நிய சக்தியின் அடிமைகளாய் பொருப்பற்ற விதத்தில் நடந்து கொள்ளும் தொழிலாளிகளும் தேசத்துரோகிகளேயாவர். வேலைநிருத்தம் தொழிலாளியின் கடைசி ஆயுதம் ஆகையால் வேலை நிருத்தம் கடைசி ஆயுதமாகவே உபயோகிக்கப்படவேண்டும். சுயநலக்கார லீடர்கள் தங்களை பிரயோஜனப்படுத்திக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் தொழிலாளர்கள் அளித்துவிடக் கூடாது. இந்திய சர்க்கார் முயற்சியால் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையே ஐந்து வருஷ இடைக்கால சமாசம் ஏற்பட்டுவிட்டது. அந்த சமரச ஒப்பந்தம் வெற்றிபெறச் செய்வது ஒவ்வொருவரின் கடமை. தொழிலாளிகளுக்கு நியாயமான பங்கைகொடுக்கவேண்டிய தங்கள் கடமையை முதலாளிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். பண பலத்தைக் கொண்டு தொழிலாளர்களின் உரிமைகளை இனி பறித்துவிட முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். உலகம் மாறிவிட்டது தொழிலாளி விழிப்படைந்துவிட்டான். விவசாயி வாழ்க்கையின் ராஜபாட்டையில் அடியெடுத்து வைத்துவிட்டான். அவனுடைய போக்கை வேறு பக்கம் திருப்பிவிட முடியாது. அப்படிச்செய்ய எத்தனிப்பவர்கள் தொழிலாளர் ஒற்றுமையின்

உருக்கு மதிலுடன் முட்டிக்கொண்டு மண்டையைத் தான் உடைத்துக் கொள்வார்கள். தொழிலாளியே இந்திய உரிமையாளன். தொழிலாளியே சர்க்காரின உதவிக்கும் அனுதாபத்திற்கும் உரியவன். அவனுடைய வாழ்க்கைத் தரத்தையுயர்த்துவதும் தேசத்தின் பிரச்னைகளை அவனுக்கு உணர்த்துவதும் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கும்படி செய்வதும் அரசாங்கத்தின் கடமை. தன்னுடைய உரிமைகளைக் கேட்க அவனுக்கு பூரணசுதந்திரம்இருக்கவேண்டும். திண்டுகளில் சாய்ந்து கொண்டு மோட்டார்களிலும், கப்பல்களிலும் உல்லாசப் பிரயாணம் செய்பவர்கள் மட்டும் நாட்டின் புத்திரர்கள் அல்ல. உழைத்து உழைத்து உருகி திருவையைப்போல் தங்கள் வாழ்நாட்களை தேய்த்துக்கொள்ளும் தொழிலாளிகள், விவசாயிகள், பாட்டாளிகளும் நாட்டின் செல்லக் குழந்தைகளேயாவர்.

கவர்னர் ஜெனரல் ராஜாஜி !

இந்திய சரித்திரத்திலேயே முதல் தடவையாக கவர்னர் ஜெனரல் பதவிக்கு ஒரு இந்தியர் நியமிக்கப் பட்டிருக்கின்றார். ராஜாஜியின் நியமனம் பொதுவாக இந்தியர்களுக்கும் குறிப்பாக தமிழர்களுக்கும் மகிழ்ச்சியைக்கொடுக்கும். சூழ்ச்சிகளும், துன்பங்களும் நிறைந்த இச்சமயத்தில் ஆங்கிலேயர்கள் போய் பொறுப்புள்ள பதவிகளில் இந்தியர்கள் வருவது நாட்டுக்கு நல்ல சகுனமாகும். அதனால் பல சிக்கல்கள் தீர முடியும். பிரிவினையால் எழுந்த பல பிரச்னைகளுக்கு பரிகாரம் காணுவது சாத்தியமாகும். ஜூன் 21-ந்தேதியுடன் விலகப்போகும் லார்ட் மவுண்ட் பேட்டனின் நல்லெண்ணத்தையும் சேவையையும் நாம் சந்தேகிக்கவில்லை. ஆயினும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர்களின் சூழ்ச்சிக்கு இலக்காகி தாங்கொணாத் துயரங்களுக்குள்ளாயிருந்த இந்தியர்கள், ஆங்கிலேயர்கள் போவதைக் குறித்து சந்தோஷிக்காமல் இருக்கமுடியாது- எனவே ராஜாஜியின் நியமனத்தால் இந்தியர்களுக்கு இரட்டை சந்தோஷம் உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை ராஜாஜி திறமைசாலி, தகுதியுடையவர் என்பது ஒரு புறமிருக்க இந்தியர் என்பதற்காக நாம் சந்தோஷமடைகிறோம். அத்துடன் ராஜாஜியே கடைசி கவர்னர் ஜெனரலாகவும் இருக்கவேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்று திட்டம் கோரிற்று, ஹிந்து முஸ்லிம் சரிசமப் பிரதிநிதித்துவத்தைத் தவிர இதர எல்லா விதிகளையும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டு விட்டது.

1946-ல் மந்திரி தூதுகோஷ்டி இந்தியாவுக்கு வந்தபோது அவர்களை சந்தித்து ஜமீயத்துல் உலமா தன்னுடைய திட்டத்தை சமர்ப்பித்தது ஜமீயத்தின் திட்டம் மந்திரி தூதுகோஷ்டியின் கவனத்தைக் கவராமல் போய் விடவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் முயற்சிகளின் பலனாக 1946-ல் வெளிவந்த திட்டம் ஜமீயத்துல் உலமாவின் திட்டமென்றே தயங்காமல் சொல்லலாம். ஹிந்து முஸ்லிம் சரிசமப்பிரதிநிதித்துவ நிபந்தனை மட்டும் முடிவடையாமல் இருந்தது காங்கிரஸும், மந்திரி தூதுகோஷ்டியும் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளாமல் இருப்பினும் இடைக்கால சர்க்கார் ஏற்பட்டபோது அதில் ஐந்து முஸ்லிம் மெம்பர்கள் இடம் பெற்றிருந்தனர்.

முஸ்லிம் லீகின் தீர்க்க தரிசன மற்ற தலைவர்கள் காங்கிரஸ் சார்பாக முஸ்லிம் நியமிக்கப்படுவதை ஆட்சேபிக்காமல் மட்டும் இருந்திருந்தால் காங்கிரஸ் சார்பில் ஒரு முஸ்லிம் மெம்பர் நியமனம் பெற்றிருப்பார். அங்கிலேயில் பதினுன்கு மெம்பர்களில் ஆறு முஸ்லிம் மெம்பர்கள் இருந்திருப்பர். அதாவது ஜமீயத் கோரிக்கையான கிட்டத்தட்ட 45% பிரதிநிதித்துவம் மத்திய சர்க்காரில் முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கும்

மெஜாரிடி மைனாரிடி பிரதிநிதித்துவ பிரச்னை தீர இன்னொரு சிறந்த உபாயமும் இருக்கத்தான் செய்தது. அதாவது இலாக்காக்களை சரியாக பகிர்ந்து கொடுத்திருக்கலாம். அல்லது போக்கு வரத்து, பாதுகாப்பு போன்ற முக்கிய இலாக்காக்களையாவது பகிர்ந்து கொடுத்திருக்க முடியும்.

மந்திரி கோஷ்டி திட்டத்தை ஏற்றுக் கொண்ட பிறகும் மிஸ்டர் ஜின்னா ஐக்கிய இந்திய அடிப்படையைத் தகர்க்க பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த சமயத்தில் 1946 ஆகஸ்டு 24-ல் இடைக்கால சர்க்காரில் சேரும்படி கேட்டுக் கொண்டு லார்டு லேவல் செய்த ரேடியோ பிரசங்கத்திலும் "முக்கியப் பிரச்னைகளில் மெஜாரிடி ஓட்டுக்களால் தோற்கடிக்க முடியும் என்று முஸ்லிம் லீக் பயப்பட வேண்டியதில்லை." இருதரப்பாரும் திருப்தி அடைந்தால் மட்டுமே கூட்டுப் பொறுப்பில் சர்க்கார் நடப்பதுசாத்தியமாக முடியும். முக்கிய இலாக்கக்கள்

சரியாக பகிர்ந்து கொடுக்கப்பட நான் முயற்சிப்பேன் லீக் தன்னுடைய முடிவை புனராலோசனை செய்யு மென நான் பூரணமாய் நம்புகிறேன்." என்று உறுதி யளித்தார். ஆயினும் முஸ்லிம் லீக் நிதானமாய் சிந்திக் கவில்லை.

மேற் கூறிய நன்மைகளுடன் திட்டத்தில் கீழ் வரும் நன்மைகளும் அடங்கி இருந்தன.

1. எல்லைப்புரம், சிந்து, பலுஜிஸ்தானம், (காஷ்மீர த்தை தனி மாகாண மாக்கியிருந்தால்) காஷ்மீர் மாகா ணங்கள் மத, கலாச்சார, நாகரீகத்துறையில் பூரண சுதந்திரத்துடன் இருந்திருக்கும்

2. பூரா பஞ்சாபும் கல்கத்தா உள்பட பூரா வங் காளமும் முஸ்லிம் மெஜாரிடியின்கீழ் இருந்து வந் திருக்கும்.

3. டில்லி, அஸ்ஸாம் மாகாணங்களில் அரசியலி லும் நிர்வாகத்திலும் முஸ்லிம்கள் கிட்டத்தட்ட பாதி அளவுக்கு இருந்திருப்பர்.

4. இதர மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் அனாதைகளாய் நாதியற்ற நிலைமைக் குள்ளாயிருக்க முடியாது.

ஏனெனில்,

(அ) சட்டசபைகளிலும், உத்தியோகங்களிலும் 30-33 சத விகிதம் இடம் பெற்றிருக்க முடியும்.

(ஆ) மந்திரிசபைகளில் முஸ்லிம்களுக்குச் சரி யான பிரதிநிதித்வம் கிடைத்திருக்கும்.

(இ) மத, கலாச்சார பிரச்னைகளில் முஸ்லிம் களுக்கு ரத்து அதிகாரம் இருந்திருக்கும்.

(ஈ) சரிசமப் பிரதிநிதித்வ அல்லது குறைந்த பட்சம் 30 சதவிகித முஸ்லிம்களைக்கொண்ட மத்திய அரசாங்கத்தின்கீழ் ரத்து அதிகாரப் பாதுகாப்புடன் முஸ்லிம்கள் நிம்மதியாக இருந்திருக்க முடிந்திருக்கும்.

(உ) முஸ்லிம்களின் மெஜாரிடி சம்மதிக்காதவரை எந்த பிரச்னையைக் குறித்தும் முடிவு செய்ய முடியாது.

காங்கிரஸும், மந்திரி கோஷ்டியும் ஏற்றுக் கொண்டிருந்த திட்டத்தின்மூலம் மைனரிடியின் தய வின்றி மெஜாரிடி தன்னிஷ்டம்போல் காரியங்களைச் செய்துகொண்டு போகமுடியாதென்றே சொல்ல வேண்டும். ஆயினும் முஸ்லிம்களின் மூளை மெஸ்மரிஸ சக்தியால் நிதானமிழந்திருந்தது. 65% முஸ்லிம்கள் பாகிஸ்தான் என்ற சொல்லொன்றைத் தவிர வேறெ தையும் புரிந்துகொள்ள முயற்சிக்காமலேயே இருந்து விட்டதுதான் துரதிர்ஷ்டமாகும்.

1946 ஜூன் மாதம் 6-லிருந்து 8-ந்தேதிவரை நடந்த லீக் கவுன்ஸில் கூட்டம் மந்திரி தூதுகோஷ்டி திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுவிட்டது. ஒரே ஒரு மெம்பர்மட்டும் எதிர்த்தார். அதன் பிறகு 51 நாட்களுக்குள் அதாவது ஜூலை 29-ந்தேதி தன் னுடைய முடிவை மாற்றிக்கொண்டு திரும்பவும் பாகிஸ்தான் கோரிக்கையை உயிர்ப்பிக்கவேண்டிய நிலைமையை உண்டுபண்ணத்தக்க சம்பவம் நாட்டில் என்ன நடந்துவிட்டதென்பதுதான் தெரியவில்லை.

லீக் சர்ச்சில் ரகசியம்.

மிஸ்டர் ஜின்னு திரும்பவும் பாகிஸ்தான் கோரிக் கையை உயிர்ப்பித்ததற்கு லார்டு வேவலும், மந்திரி தூதுகோஷ்டியும்தான் காரணம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. ஆயினும் மிஸ்டர் சர்ச்சிலுக்கும், மிஸ்டர் ஜின்னுவுக்கும் இடையே அந்தரங்க பேச்சு வார்த்தை நடந்ததாக அமெரிக்காவின் பிரபல எழுத் தாளியான மிஸ்டர் லூயி பிஷர் வெளியிட்டிருக் கின்றார்.

மிஸ்டர் ஜின்னுவுக்கும் சர்ச்சிலுக்குமிடையே ரகசியக் கடிதப் போக்குவரத்து நடப்பதாக, பார்லி மெண்டின் உணவு மெம்பர் மிஸ்டர் மைக்கேலும் குற்றம் சாட்டினர்.

குற்றச்சாட்டை மறுக்க மிஸ்டர் ஜின்னு வீண் முயற்சி செய்தாராயினும் ரகசியக் கடிதப் போக்கு வரத்தை அவரால் மறுக்க முடியவில்லை.

எது எப்படியிருப்பினும் பம்பாயில் கூடி லீக் கவுன்ஸில் மந்திரி தூதுகோஷ்டி திட்டத்தை நிரா கரித்து பாகிஸ்தான் கோரிக்கையை மீண்டும் உயிர்ப் பித்து ஆகஸ்ட் 16-ந்தேதியை காட்டுமிராண்டித் தனத்துக்கும், மிருகத்தனத்துக்கும் அடிகோலிய நேரடி நடவடிக்கை தினமாக நிர்ணயித்த தேதியான 1946 ஜூலை 29-ந்தேதியை பம்பாய் வாசிகள் மறந் திருக்கமுடியாது. நேரடி நடவடிக்கை தினத்தை அனுஷ்டிப்பதில் கல்கத்தா மற்ற இடங்களைவிட முந்திக்கொண்டிருந்தது

கல்கத்தா, நவகாளி, பீஹார், குர்முக்தேஸ்வர், எல்லைப்புரம், பஞ்சாப் முதலிய இடங்களில் நடந்த மனித ஒழுக்கத்திற்கு களங்கத்தை உண்டுபண்ணும் காரியங்கள் பிரிவினை ஒன்றே பிரச்னை தீர வழி யென்று எல்லா வகுப்பினரும் நினைக்கும்படிச்செய்து விட்டன.

(14-ம் பக்கம் பார்க்க)

கடிதங்கள்.

சிறந்த யோசனை.

(ஹாஜி M அப்துர் ரஹ்மான் சாஹிப்)

மக்களின் ஒற்றுமையே ஒரு தேசத்தின் உண்மையான செல்வமும் பாதுகாப்புமாகும் சமூக சமுதாய வாழ்வுக்கு ஒற்றுமை அத்தியாவசியம் ஒற்றுமையே வாழ்வு; வேற்றுமையே தாழ்வு. அடிமை இந்தியாவில் இருந்ததைவிட சுதந்திர இந்தியாவில் ஒற்றுமையின் அவசியம் ஆயிரம் மடங்கு அதிகரித்து விட்டது வெள்ளையரின் பிரித்தாளும் சூழ்ச்சியால் பிரிக்கப்பட்டிருந்த ஹிந்து முஸ்லிம்கள் வெள்ளையாட்சி மறைந்த பிறகு ஒன்றுபடாமல் பிரிந்திருக்கப் போவதில்லை ஆயினும் கடந்த காலத்தில் இந்தியாவின் மாபெரும் இரண்டு சமூகங்களிடையே துரதிர்ஷ்டவசமாக ஏற்படுத்தப்பட்டுவிட்ட மனக் கசப்பை போக்குவதற்காக சாதனங்கள் தேவை. அத்துறையில் பத்திரிகைகள் பெருமளவில் சேவை செய்யமுடியும். 'ஆஸாத்' அவ்வித சேவையை மேற்கொண்டு வெளிவந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

நாட்டின் அவசரத் தேவையான ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்தும் லட்சியத்தில் 'ஆஸாத்' வெற்றிபடையப் பிரார்த்திக்கிறேன். முஸ்லிம்களாயினும், ஹிந்துக்களாயினும் தவறான வழியில் செல்லாமலிருப்பதற்கு அரசியல் அறிவுடன் மத அறிவும் வேண்டும். அரசியல் அறிவு ஊட்டுவதில் ஆஸாத், மகத்தான சேவை செய்து வருகின்றது. இன்றைய அரசியல்நிலைமையை பாரபட்சமின்றி தத்ரூபமாய் சித்தரித்துக் காட்டி இந்தியர்களின் அரசியல் கடமைகளை உணர்த்துகின்றது. அத்துடன் முஸ்லிம்களுக்கு மத அறிவு ஊட்டுவதிலும் சேவை செய்தால் மிகவும் நன்மை பயக்கக்கூடியதாய் இருக்க முடியும். முஸல்மான்களின் இன்றைய நிலைமைக்கு மதக்கல்வி இல்லாமையே காரணம்.

இஸ்லாமின் உயரிய போதனைகள் மட்டும் முஸ்லிம்களுக்குத் தெரிந்திருந்தால் அவர்கள் மற்றவர்களையும் தங்களைப்போலவே பாவித்திருப்பார்கள். வகுப்புவாதம் அவர்களை அணுகியிருக்க முடியாது. மதாபிமானம், தேசாபிமானத்துடன் மனுஷாபிமானமும் அவசியம் என்பதை உணர்ந்திருப்பார்கள். அந்நிலையில் ஜாதி மத வேற்றுமையின்றி எல்லோருக்கும் சேவை செய்ய முன்வந்திருப்பர். எல்லாவற்றையும் விட மேல்காட்டு அரசியலுக்கும், நாகரீகத்திற்கும், சூழ்ச்சிகளுக்கும் இலக்காகாமல் இருந்திருப்பர். எனவே கடந்த இரண்டு நூற்றுண்டுகளில் இந்திய முஸ்லிம்கள் இழந்துவிட்ட இஸ்லாமிய பண்பாட்டை மீண்டும் அளித்து மறந்துவிட்ட பண்டைப் பெருமையை ஞாபகமூட்டி முஸ்லிம்களைச் சரியான வழியில் அழைத்துச்செல்ல 'ஆஸாத்' சாத்தியமான அளவு முயற்சிக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம் மௌலானா அப்துல் ஹக்கீம் தேவ்பந்தியை ஆசிரியராகக் கொண்டிருக்கும் 'ஆஸாத்' அதைச் செய்யமுடியும் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் அபிப்பிராய பேதங்கள் இருந்திருப்பினும் இன்று முஸ்லிம்கள் அந்தரங்க சுத்தியுடன் சுயநலங் கருதாது உழைக்கும் ஊழியர்களை தெரிந்துகொண்டு விட்டனர். எனவே 'ஆஸாதை' ஆதரிக்கவேண்டியது இன்று முஸ்லிம்களின் சமூக கடமை என்பதை எடுத்துச்சொல்லவேண்டிய அவசியமில்லை.

○ ○ ○

அதிராம்பட்டிணம்,

மௌலானா அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்! அநேக வருஷங்களாக அடிமைப்பட்டுக்கிடந்துவாடிய இந்நாடானது அண்மையிலேவிடுதலையைக்கிட்டிவெற்றிச்சங்குஊதிய இம்மகிழ்ச்சிக்குறிய நேரத்தில் 'ஆஸாத்' என்ற வாரத்தாள் வரப்பெற்றது எம்முடைய அதிர்ஷ்டமேயாகும் பாதாள படுகுழியிலே மீளவழியின்றி விழப்போன முஸ்லிம்சமூகத்திற்கு பகுத்தறிவு என்ற பச்சைமிளகாயைத் தடவி ஊக்குவித்த தன்னலமற்ற அரிய தொண்டானது,மதிப்பிற்குரிய "ஆஸாத்"தைச் சேருமென்பதை உணர்ச்சியுடன் கூறுகின்றேன். தாங்கள் புனர் வாழ்க்கை என்ற தலைப்பின்கீழ் எழுதிவந்த விஷயங்களை உற்று நோக்கினேன். படிக்கப் படிக்க பரவசமானேன். இனி பாமர முஸ்லிம் சமூகம் அறியாமை என்ற இருட்டைவிட்டு பகுத்தறிவு என்ற பட்டப்பகல் வெளிச்சத்தை நாடிவிடும் என்பதை பகரவும் வேண்டுமா? ஆனல் சிறிதுகாலம் அதை தங்கவைத்து இந்த வாரத்தில் மீண்டும் வெளியிட்டமைக்கு என் அன்புகனிந்த சலாம். புனர்வாழ்க்கை பகுத்தறிவு அற்ற பாமர முஸ்லிமை அஞ்ஞானப்படுகுழியில் விழவிடாமல் தடுத்து அவர்களை புனர் வாழ்க்கை எடுக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை எனக்கூற ஆசைப்படுகிறேன். ஆகையினல் இனி இப் புனர்வாழ்க்கையை எங்களுக்கு அளித்து எங்களை மகிழ்விப்பதோடு மட்டுமின்றி எங்கள் ஆக்கவேலையில் ஊக்கங்காட்டச் செய்யும்படி கோருகின்றேன். தங்களுக்கும், "ஆஸாத்"துக்கும் என் மட்டமற்ற வணக்கம்.

ம. மீ. செ. அபுல்ஹசன்,
ஆஸாத் வாலிபர் சங்க காரியதரிசி.

கடையநல்லூர்

சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவர் M. இஸ்மாயிலும் அவருடைய சகாக்களும் முஸ்லிம் லீக்கை இந்திய டொமினியன் முஸ்லிம் லீக்கென்று பெயரை மாற்றி வைத்துக்கொண்டு நாட்டில் உள்ள பல சிக்கல்களையும், கஷ்டங்களையும் உணராமல் முஸ்லிம் லீக் நீடிப்பதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்துவருகிறார்கள். டொமினியனில் முஸ்லிம் லீக் நீடித்தால் முஸ்லிம்களுக்கு பல கொடிய இன்னல், களும் அபாயங்களும் நேரிடுவதுடன் நாட்டுக்கும் தீமையேயாகும்.

பிரிவினைக்குப் பிறகு இந்திய விசுவாசிகளாய் நடந்துகொள்வதாக அளித்த வாக்குறுதி உண்மையானால் 'லீக்' ஸ்தாபனம் உடனே கலைக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? இன்னும் கலைக்கப்படாமலிருப்பது மக்களுக்கு அதிருப்தியை உண்டாக்கி வருகிறது. அதோடுமட்டுமில்லை, ராஜினாமா செய்த M. L. A.-க்களை பதவியிலிருந்து விலகும்படி சங்கங்களும் கோவை ஹனீபா போன்ற சில நபர்களும் எழுதிவருகின்றனர். இதுதானா விசுவாசம் முஸ்லிம் சகோதரர்களே! பிடிவாதமாக மனம்போன போக்கிலே போகாமல் நிதானித்து மெய்யான மார்க்க அரசியலைப் பின்பற்றுவீர்களானால் இந்திய சுதந்திரத்தை சுமூம் அனுபவிக்க முடியும். இல்லையேல் கடுமையான சோதனைக்குள்ளாகி சுதந்திர வாடையைக்கூட நுகர முடியாமல் போய்விடும் என 'லீக்' தலைவர்களையும், முஸ்லிம்களையும் எச்சரிக்கின்றேன்.

இந்திய பார்லிமெண்டில் வகுப்பு வாதத்துக்கு இடமில்லையென்று தீர்மானிக்கப்பட்ட பிறகும், முஸ்லிம் லீக் ஸ்தாபனம் கலைக்கப்படாமல் இருப்பது சர்க்காருக்கு விரோதம். அதிலும் லீகர்கள் சர்க்காரில் பதவி வகிப்பது சட்டத்துக்குப் புறம்பாகும். முஸ்லிம் லீக் ஸ்தாபனம் உடனே கலைக்கப்படவேண்டும். அல்லது லீகர்கள் சர்க்கார் பதவிகளை ராஜினாமா செய்யவேண்டும். இதுதான் எங்களுடைய வேண்டுகோள். நாம் நேர்மையாக நடக்காதவரை பிறரிடமிருந்து நேர்மையை எதிர்பார்ப்பது அசாத்தியமல்லவா? "மைனரிடி வகுப்பினர் அரசாங்கத்துக்கு விசுவாசமுள்ள பிரஜைகளாக இருக்கவேண்டும். அப்படியில்லாத வகுப்பினரை "எந்த" அரசாங்கமும் சகித்துக்கொண்டிருக்காது" யென்று மிஸ்டர் ஜின்னா சொன்னதை மறந்துவிட்டனரா முஸ்லிம்கள்? ஆகஸ்ட் 15உ முஸ்லிம் லீக் இந்தியாவை பாகிஸ்தானென்றும், ஹிந்துஸ்தானென்றும் பிரித்துவிட்டது பிறகும் இன்னொரு முஸ்லிம் லீக் ஹிந்துஸ்தானில் இருந்துவர என்ன நியாயம் இருக்கிறது? என்று மாகாண முஸ்லிம் லீக் தலைவரைக் கேட்கிறேன். பிடிவாதத்தால் விளையும் தீமைகளால் வருங்கால மக்களுக்கும் அபாயங்கள் நேரிடும் என அஞ்சுகிறேன். இந்திய பிரச்னைதீர பாகிஸ்தான் ஒன்றே வழி என ஜனப் ஜின்னா கர்ஜித்தார். அதற்குப் பிறகு இரு நாடுகளும் சுமுகமாக வாழலாம் என்று நாம் சந்தோஷப்பட்டோம். இன்று துக்கப்படுகிறோம். நாடு சிதறுண்டு வகுப்பு துவேஷம் அதிகரித்து கொலை, கொள்ளை, அட்டூழியம், தீயிடுதல், கற்பு அழித்தல், மஸ்ஜிதுகளை ஆக்ரமித்தல், பொறுமை, கோள், பொய், களவு நிறைந்த மிருகச் செயல்களெல்லாம் கண் முன்னே நின்றுவருகின்றன இன்னும் பிரச்னை தீர்ந்தபாடில்லை. கணக்கற்ற நிரபராதிகள் உயிர், சொத்து சுகமிழந்து என்ன பாக்கியமடைந்தனர்? இதையெல்லாம் வயோதிகர்களும், வாலிபர்களும் சிந்தனையில் இருத்தி நேர்வழிப் படுவார்களென நம்புகிறேன். நிகழும் சம்பவங்களை படிப்பினையாகக் கொள்ளாதவர்களை, மனிதவர்க்கத்துக்கு அருகதையற்றவர்கள் என்று பெரியோர்கள் எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள் ஆகையினால் நடந்தது நடந்துவிட்டது. இனி நாம் என்னசெய்ய வேண்டுமென்பதில் உங்கள் கவனத்தை திருப்புங்கள் முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தை உடனே கலைத்து இந்திய தேசியகாங்கிரஸில் சேர்ந்து பூரணமாய் ஒத்துழைக்க கேட்டுக்கொள்கிறேன்.

S. T. அப்துல் காதர்,
தேசீய முஸ்லிம் சங்க காரியதரிசி.

O O O

அரகண்டநல்லூர்.

அரகண்ட நல்லூர் வர்த்தக காரியஸ்தர்கள் சங்கத்தின் கூட்டம் 2—5—48, காலை தேசீய வாலிபர் சங்கத்தில் தலைவர் N சிகாமணிப் பிள்ளை தலைமையில் கூடி மாதாந்திர வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்த பின்னர் சிறந்த தேசபக்தரும், காங்கிரஸ் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டு காந்தீய லக்ஷியங்களுக்கு உழைப்பவருமான மாயவரம் ஜி. நாராயணசாமி நாயுடு மிராசுதார்கள் சூழ்ச்சியினால் கைது செய்யப்பட்டு பலநாட்களாய் பாதுகாப்பில் இருப்பதைக்குறித்தும் அரசாங்கம் அவரை இன்னும் விடுதலை செய்யாதிருப்பதைக் குறித்தும் மனம் வருந்துவதுடன் அன்னாரை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்றும் கோரி ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை —

ஜமீயத்துல் உலமா எதிர்காலம்

(மௌலானா ஹிப்சுர் ரஹ்மான் விளக்கம்)

ஜமீயத்துல் உலமாவின் பொதுக்காரியதரிசி மௌலானா ஹிப்சுர் ரஹ்மான் பம்பாயில் கூடிய ஜமீயத் கூட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கீழ்வருமாறு அறிவித்தார்

இன்றைய ஜமீயத்துல் உலமா மௌலானா மஹ்மூதுல் ஹஸ்ஸன் தேவ் பந்தி தலைமையில் 1919-ல் அமிர்தசரஸில் ஆரம்பமாயிற்று அன்னிய அடிமையை எதிர்த்து அணிவகுத்து நிற்க இஸ்லாமிய அடிப்படையில் முஸ்லிம்களிடையே சுதந்திர உணர்ச்சியும் உத்வேகமும் உண்டு பண்ணுவதற்காகவே ஜமீயத்துல் உலமா உருவாயிற்று கிலாபத் போராட்டம் அதன் வினைவுகளின் ஒரு அம்சமே யாகும். ஆகஸ்டு 15-வரை தன்னுடைய முப்பது வருஷ சுதந்திர போராட்டத்தில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை பிற்போக்கு சக்திகளை முறியடித்தல், ஐக்கிய சமுதாயத்தை உருவாக்குதல் சமூகத்துக்கும் சமுதாயத்துக்கும் தொண்டாற்றுதல் போன்ற விஷயங்களில் ஜமீயத்துல் உலமா செய்திருக்கும் மகத்தான சேவைக்கு கடந்தகால ஏடுகள் சாட்சியாக இருக்கின்றன. கடந்தகால அரசியல் தனித்தொகுதி தேர்தலை அடிப்படையாகக் கொண்டிருந்ததால் தேசியத்தை வளர்த்து வகுப்பு வாதத்தை எதிர்த்துப் போராடி சுதந்திரத்தைப் பெருவதற்காக அரசியலில் நேரடியாக பங்குகொள்ள ஜமீயத்துல் உலமா தீர்மானித்திருந்தது ஆனால்சுதந்திரம் கிடைத்து தனித் தொகுதி தேர்தல் முறை ஒழிந்து வருங்கால சுதந்திர அரசியல் கூட்டுத் தொகுதி அடிப்படையில் அமைந்துவிட்ட பிறகு இன்று ஜமீயத்துல் உலமா கூட்டு அரசியல் நடவடிக்கையிலிருந்து விலகி முஸ்லிம்களின் மத, கலாச்சார, நாகரீக, சீர்திருத்த, கல்வி சம்மந்தபட்ட உரிமைகள், கடமைகள், கோரிக்கைகளின் எல்லைகளுக்குள் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்வதையே சமூக நலன் வற்புறுத்துகின்றது. அதனால் விடுதலைக்குப் பிறகு கூட்டு முறையில் தேசத்துக்கு தொண்டாற்ற சந்தர்ப்பம் கிடைக்கமுடியும்

ஜமீயத்துல் உலமா உண்மையில் இமாம் வலியுல்லா தெஹ்லவியின் அரசியல் நோக்கங்களையே பின்பற்றுகின்றது "நாடு அடிமையாகிவிட்டால் முதலில் உலமாக்கள் அடிமை சாபக்கேட்டை போக்க முயற்சிக்க வேண்டியது அவர்களுடைய கடமை. அதில் வெற்றி யடைந்த பிறகு முஸ்லிம்களின் மத, கலாச்சார சேவையில் ஈடு பட வேண்டும். அத்துடன் சமூக, சமுதாய தொண்டையும் அலட்சியம் செய்து விடக் கூடாது.' என்பது இமாம் வலியுல்லா தெஹ்லவியின் அரசியல்.

எனவே சுதந்திரம் கிடைத்துவிட்ட பிறகு இப்பொழுது ஜமீயத்துல் உலமாவின் புதிய சகாப்தம் ஆரம்பமாகின்றது. மௌலானா ஆஸாத் தலைமையில் கூடிய லக்னோ மகாநாட்டிலும் பம்பாய் கூட்டத்திலும் செய்யப்பட்ட முடிவுகள் பூர்த்தி செய்யப்படும் ஆயினும் மௌலானா மதனியின் தலைமையில் நாட்டின் பல்வேறு சமூகத்தினரிடையே சகோதரத்துவத்தை வளர்க்கவும் முஸ்லிம்களை வகுப்புவாதத்திலிருந்து வெளியேற்றவும் சேவை செய்வதை ஜமீயத்துல் உலமா விட்டு விடாது. இன்று பம்பாயில் கூடிய கூட்டத்தில் தன்னுடைய புதிய திட்டத்தை சுதந்திர இந்தியாவில் ஜமீயத்துல் உலமா வெளியிட விருக்கின்றது. பம்பாய் கூட்டத்தின் லட்சியம் அதுதான்

வலங்கைமானில் பொதுக்கூட்டம்

சென்ற ஞாயிறன்று (2-5-48) மாலை "சோலை" கை பிரதி பத்திரிகை நிர்வாகிகளால் ஓர் பொதுக் கூட்டம் போடப்பட்டது அக் கூட்டத்திற்கு வலங்கைமான் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ திரு வேங்கிட ராஜாளியார் தலைமை வகித்தார். "ஆஸாத்" ஆசிரியர் மௌலானா அப்துல் அஜீம் "தற்கால அரசியல் நிலைமை" என்பதுபற்றி விரிவாக சுமார் 1½ மணி நேரம் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் தமது முன்னுரையில் "ஆஸாத்" ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். அப்துல் அஜீம் பேசுகையில், இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னால் இருந்த நிலைமையையும், சுதந்திரமடைந்த பிறகு ஏற்பட்ட மாறுதலைப் பற்றியும் விளக்கி சோஷலிஸத்திற்கும், காங்கிரசிற்கும் யாதொருவேற்றுமை இல்லையென்றும் கம்யூனிஸ்டுகளின் வலையில் சிக்கவேண்டாமென்றும் குறிப்பாக, அரசாங்கம் விவசாயிகளிடத்திலும், தாழ்த்தப்பட்டோர்களிடத்திலும் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்றும் பேசினர். ஜனப் அப்துல்சத்தார் "சோலை" நிர்வாகிகள் சார்பாக வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

—: புனர் வாழ்க்கை. :—

(o)

வகுப்பு வாதம்.

பதினேலாவது நூற்றுண்டுக்குப் பிறகே ஐரோப்பாவுக்கு சகோதரத்துவம் என்ருல் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்ததென்று ஐரோப்பிய பிரபல எழுத்தாளி ஒருவர் எழுதுகிருர். ஆனல் சகோதரத்துவமே இஸ்லாமின் அடிப்படையாகும். வகுப்பு வாதத்தின் நிலைமையும் அப்படித்தான். வகுப்பு வாதத்தின் நாசகாமான தன்மையை மக்கள் இன்று தான் உணர ஆரப்பித்திருக்கின்றனர். ஆயினும் பதிமூன்று நூற்ருண்டுகளுக்குமுன்பே வகுப்புவாதத்தை இஸ்லாம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது. இஸ்லாமில் 'அஸபிய்யத்' என்ருல் வகுப்பு வாதம் என்று அர்த்தம். முஹம்மது நபிகள் நாயகம் அதைக் கடுமையாகக் கண்டித்திருக்கிருர்.

நபியவர்கள் வகுப்பு வாதத்தைக் கண்டித்துச் சொல்லியிருக்கும் அரபி பாஷையிலுள்ள வாக்கியங்கள் அப்படியே கீழேதரப்படுகின்றன.

"லைஸ மின்னு மன் தஆ இலா அஸபிய்யதி
லைஸ மின்னு மன் காதல அலா அஸபிய்யதி
லைஸ மின்னு மம் மாத அலா அஸபிய்யதி"

எவனெருவன் வகுப்பு வாத திசையில் அழைத்தானே அவன் நம்மைச் சேர்ந்தவனல்ல.

எவனெருவன் வகுப்பு வாத உணர்ச்சியால் சண்டை செய்தானே அவன் நம்மைச் சேர்ந்தவனல்ல.

எவனெருவன் வகுப்பு வாதத்தில் செத்தானே அவனும் நம்மைச் சேர்ந்தவனல்ல.

வகுப்புவாதிகளே! இஸ்லாமிய போதகரின் வார்த்தைகளை சிந்தியுங்கள். இதைவிட அதிகமாக வகுப்பு வாதத்தைக் கண்டிக்க முடியுமா? வகுப்பு வாதப் பிரசாரகன் முஸ்லிமல்ல. வகுப்பு வாதக் கலகக்காரன் முஸ்லிமல்ல. வகுப்பு வாதத்தில் உயிர் நீத்தவனும் முஸ்லிமல்லவென்று நபியவர்கள் சொல்லியிருக்கையில் முஸ்லிம்கள் வகுப்புவாதிகளாக இருக்க முடியாது.

இதுவரை வகுப்புவாதத்தைக் கண்டித்து பேசப்பட்டதையும், எழுதப்பட்டதையும் தராசின் ஒரு தட்டிலே வையுங்கள். நாயகத்தின் வார்த்தைகளை இன்னெரு தட்டிலே வைத்துத் தூக்கிப் பாருங்கள். இரண்டாவது தட்டு கனமுள்ளதாக இருக்கும் என்பது நிச்சயம். 'நாயகத்தின் வார்த்தைகளுக்குள் வகுப்பு வாதத்தை எதிர்த்து ஒரு காவியமே அடங்கியுள்ளது. மாபெரும் அழிவுக்கும், நாசத்திற்கும் இலக்கான பிறகு இன்று மக்கள் வகுப்பு வாதத்தைக் கண்டிக்க முன்வந்தனர். ஆனல் வகுப்புவாதம் என்ருல் என்னவென்றும் அதன் நாசகரமான தன்மை எத்தகையதாயிருக்கும் என்றும் உலகுக்குத் தெரியாமலிருந்த அக்காலத்திலேயே வகுப்புவாதத்தை இஸ்லாமிய போதகர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

வகுப்புவாதம் என்ருல் என்ன?

வகுப்புவாதம், வகுப்புவாதமென்று சொல்லுவதைத் தவிர வகுப்புவாதமென்ருல் என்னவென்றும் அதன் எல்லைகள் எவையென்றும் அனேகருக்குத் தெரியாமலேயே இருந்து வருகின்றது. வகுப்பு வாதத்தைக் கண்டித்தது மட்டுமின்றி வகுப்புவாதமென்ருல் என்னவென்றும் இஸ்லாமிய போதகர் விளக்கிக் காட்டியுள்ளார். வகுப்பு வாதத்தை நபியவர்கள் கண்டிக்கையில் வகுப்பு வாதமென்ருல் என்ன என்று ஒருவர் கேட்டார்.

"அன் துஈன் கௌமக அலா ஜுல்மி"

அநியாயத்தில் உன்னுடைய சமூகத்துடன் நீ ஒத்துழைப்பதே வகுப்புவாதம் என்று நபி அவர்கள் பதிலளித்தார்.

உங்களுடைய சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் இன்னெருவனுடன் அநியாயமாய் நடந்துகொள்ளும்போது அவனைத் தடுக்காமல் உங்களுடைய சமூகத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக அவனுடன் ஒத்துழைப்பதும் அவனுக்கு உதவி செய்வதும் அவனை ஆதரித்து சாட்சி சொல்லுவதும், அவனை ஆதரிக்காமல்விட்டால் சமூகக் கௌரவம் போய்விடுமென்று நினைப்பதும் வகுப்புவாதமாகும்.

நியாயத்தை ஆதரிப்பதே நியாயம். தீங்கிழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்வதே கடமை. தகப்பனே அநியாயம் செய்யினும் அவனைத் தடுப்பது மகனுடைய வேலை. தீங்கிழைக்கப்பட்டவன் அன்னியனென்பதற்காக அனுதரவாகவிட்டுவிடுவது ஒழுக்கமல்ல. மிருகங்களும்தான் இனத்துடன் ஒத்துழைக்

போலிக் கௌரவம் வேண்டாம்.

— காங்கிரஸில் சேருங்கள். —

—: A. M. அல்லா பிச்சை. :—

சென்னை மாகாண ஐக்கிய முன்னேற்ற நிர்வாக கமிட்டி மெம்பர் ஜனாப் A. M. அல்லாபிச்சை B. A., B. L., பத்திரிகைகளுக்கு கீழ்வரும் அறிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டதற்கு இந்திய யூனியன் முஸ்லிம்கள் வகுப்பு வாத அரசியல் ஸ்தாபனங்கள் வைத்திருக்கக் கூடாதென்பதே நோக்கம். இந்தியாவின் எல்லா பாகங்களிலுமுள்ள முஸ்லிம்களும் லக்னோவில் கூடி மௌலானா ஆஸாதின் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்லீக் லீடர்களும் இந்திய யூனியனுடன் பூரணமாய் ஒத்துழைப்பதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டனர். நாம் அவர்களை நம்பவேண்டும் மகாத்மா காந்திஜீ ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக மிகப்பெரிய தியாகம் செய்திருக்கின்றார். இந்நிலையில் கிட்டத்தட்ட எல்லா மாகாண சர்க்கார்களும் முஸ்லிம்களை நம்பாமல் இருப்பது ஆச்சரியமாகவும், வருத்தமாகவும் இருக்கிறது கடந்த காலத்தில் முஸ்லிம்கள் முஸ்லிம் லீகினால் தவறான வழியில் இழுத்துச் செல்லப்பட்டனர் என்பதற்காக முஸ்லிம்கள்மீது அவநம்பிக்கை கொள்வதென்றால் ஹிந்து சமூகத்தைச் சேர்ந்த ஒருவனால் மகாத்மா காந்தி கொல்லப்பட்டிருக்கையில் இந்தியர்கள் ஒரு ஹிந்துவை எப்படி நம்பமுடியும். இது பைத்தியக்காரத்தனமான வாதம். நாம் கடந்த காலத்தை மறந்து நம்முடைய மக்களை நம்பவேண்டும். நாடு பல சோதனைகளை எதிர்நோக்கியிருக்கின்றது. பிற்போக்கு சக்திகள் தீவிரமாக வேலை கின்றன. ஓநாய் எப்பொழுதும் ஓநாயுடனேயே ஒத்துழைக்கும். அதைப்போலவே மனிதனும் நியாயத்துக்கு மாறாக தன்னைச் சேர்ந்தவர்களுடன் ஒத்துழைத்து விடுவது பெரிய காரியமல்ல. நாகரீகமுள்ள மனிதர்களுக்கு அது அழகல்ல. நியாயத்தை ஆதரிக்காமல், தீங்கிழைக்கப்பட்டவனுக்கு உதவி செய்யாமல் குறுகிய வகுப்புவாத வலையில் சிக்கி முஸ்லிம்கள் இஸ்லாமிய பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் இழப்பதற்கு சம்மதிக்க முடியாது.

வகுப்பு வாத உற்பத்தி

இஸ்லாம் வகுப்பு வாதத்தைக் கண்டிப்பதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. வகுப்புவாதத்தை உற்பத்தி செய்ய அடிபபடையாக உள்ள காரணங்களையும் தகர்த்திருக்கின்றது.

ஜாதீய வாதத்திலிருந்து வகுப்புவாத உணர்ச்சி உண்டாகின்றது. ஜாதீய மேம்பாட்டின் போலிக் கவுரவம் அந்த உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றது. முற்றிய பருவத்தில் அவ்வித உணர்ச்சி மற்றவர்களைத் தாக்கும் ரூபத்தில் வெளிப்படுகின்றது.

குறுகிய நோக்கத்தில் சமுதாய உணர்ச்சியும், தேசாபிமானமும்கூட வகுப்பு வாதத்தையே வளர்க்கின்றன. அதனால் சமூக, மாகாண, கோஷ்டி உணர்ச்சிகள் கிளைக்கச் செய்கின்றன.

சர்வ தேசீயத்துக்கு முட்டுக்கட்டையாக இல்லாத தேசீயத்தை இஸ்லாம் தடுக்கவில்லை தேசாபிமானத்தையும் இஸ்லாம் தடுக்கவில்லையாயினும் பூகோள எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தாமல் இருக்க வேண்டியது நிபந்தனையாகும். இந்த எல்லைகளையெல்லாம் கடந்து மனுஷாபிமானத்துக்கு இஸ்லாம் அடிகோலியிருக்கின்றது. அதை உணர்ந்து கொள்வதற்கு ஒழுக்கம் தேவை.

அன்பே மதங்களின் அடிப்படை. துவேஷத்தை பரப்பும் ஸ்தாபனங்களுக்கு அன்பை அடிப்படையாகக்கொண்ட மதத்தினரின் ஆதரவு அதிகநாள் வரை கிடைத்துக்கொண்டிருக்க முடியாது. இன்று முஸ்லிம் லீக் அடைந்த கதியே அதற்குப் போதிய அத்தாட்சியுமாகும்.

இந்திய முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் முஸ்லிம்லீகை ஆதரித்தனர். முஸ்லிம்லீக் துவேஷத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு ஸ்தாபனம். வகுப்பு வாதமே அதன் ஜீவன். முஸ்லிம்களின் இன்றைய நிலைமைக்கு நபி அவர்களின் போதனையை அலட்சியம் செய்து வகுப்பு வாதத்தை ஆதரித்ததே காரணம். இந்நிலையில் வகுப்பு வாதத்தை விடுவதைத் தவிர சிறந்த பரிகாரம் வேறென்ன இருக்கமுடியும். வகுப்பு வாதத்தை விட்டு நாம் முதலில் நபி அவர்களை சேர்ந்தவர்களாக ஆகவேண்டும். அதன் பிறகு சகல துன்பங்களும் சூரியனைக்கண்ட பனி போல் தானே அகன்று விடுவது சாத்தியமாகும்.

யில் முனைந்திருக்கின்றன. காங்கிரஸ்காரர்களாலும், காங்கிரஸின் அரசியல் எதிரிகளாலும் நாளுக்கு நாள் காங்கிரஸ் பலஹீனமடைந்துவருகிறது. கம்யூனிஸ்ட் சூழ்ச்சிகள் காங்கிரஸுக்கு தொல்லைக்கு மேல் தொல்லை கொடுத்துவருகின்றன சோஷலிஸ்டுகள் நிதானமிழந்து கம்யூனிஸ்ட் வலையில் சிக்கிவிட்டனர். நம்முடைய மாகாணத்தில் கருப்புச் சட்டைக்காரர்களால் தொல்லை மேலும் அதிகரித்துவருகிறது இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களை காங்கிரஸில் சேர்க்க முயற்சிக்க வேண்டியது ஒவ்வொரு காங்கிரஸ்காரனுக்கும் தட்டிக்கழிக்கமுடியாத கடமையாகும்.

முஸ்லிம்களை காங்கிரஸில் சேரும்படி யோஜனை கூறவேண்டுமென்று நான் காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களை வேண்டுகிறேன். முஸ்லிம்களிடையே காங்கிரஸ் வெற்றி பெற வேண்டுமென மகாத்மா காந்தி விரும்பினர் என்பது எனக்குத் தெரியும். கம்யூனிஸ்ட் சோஷலிஸ்டு கட்சிகளில் முஸ்லிம்கள் சேரும்படி விட்டுவிடுவது மிகப்பெரிய தவருகவே இருக்கும். முஸ்லிம்களை சரியான முறையில் அணுகினல் அவர்கள் காங்கிரஸில் சேருவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அது காங்கிரஸ்காரர்களைப் பொறுத்திருக்கிறது. நம்பிக்கை பரஸ்பர நம்பிக்கையை உண்டாக்கும். பாகிஸ்தான் எகிப்தைப்போன்றதொரு அன்னிய நாடு என்பதை முஸ்லிம்கள் இன்று உணர்ந்துவிட்டனர். முஸ்லிம்கள்மீது நம்பிக்கை வைத்தால் அவர்கள் துரோகம் செய்யமாட்டார்கள் எனக்கு முஸ்லிம்களின் மனப்போக்கு நன்ருகத் தெரியும். முஸ்லிமல்லாதாரைப் போலவே இந்தியா முஸல்மான்களுக்கும் தாயகம். சமயம் வரும்பொழுது தங்களுடைய தாய் நாட்டுக்காக சற்றும் தயங்காமல் முஸ்லிம்கள் தங்கள் ரத்தத்தை சிந்துவார்கள் என்று எனக்கு நம்பிக்கையுண்டு முஸ்லிம்களில் இன்றும் சில தேசத்துரோகிகள் இருந்தால் அவர்கள் தேசத்துரோகிகளாகவே சாகட்டும். காங்கிரஸ்காரர்கள் கடமையை உணர்ந்து கடமையை செய்ய முன்வரும்படி வேண்டுகிறேன் மாகாண சர்க்கார் மைனரிடி போர்டுகளை ஏற்படுத்தி காங்கிரஸுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே தொடர்பு ஏற்படுத்த வேலை செய்யமுடியும். இந்திய யூனியன் முஸ்லிம்கள் ஓரளவுக்கு உற்சாகம் இழந்துவிட்டனர். அவர்களுடைய சோர்வு இந்தியாவை பலஹீனப்படுத்தக்கூடும். காஷ்மீரில் அப்துல்லாவையும், பிரிகேடியர் உஸ்மானையும் நம்புவதைப்போல் முஸ்லிம்களையும் நம்பவேண்டும். தங்கள் தாய் நாட்டினர் சேவையில் சாத்தியமான எல்லா தியாகங்களையும் செய்த முஸ்லிம்களை புத்திசாலித்தனமான ஒரு மனிதன் எப்படி சந்தேகிக்கமுடியும். அவர்களை அலட்சியம் செய்வது இந்தியாவுக்கு தீங்கிழைப்பதாகும். காங்கிரஸ் குறிப்பிட்டதொரு சமூகத்துக்கோ அல்லது கோஷ்டிக்கோ சொந்தமல்ல என்பதை உணர்ந்து ஆயிரக்கணக்கில் முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். போலிக் கௌரவத்தைப் பாராட்டவேண்டாமென நான் அவர்களுக்கு யோஜனை கூறுகின்றேன். தவறு என்று தெரிந்த பிறகு சரியான காரியத்தை செய்பவனே முஸ்லிம். எனவே முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர்ந்து நம்முடைய மதிப்புக்குரிய தலைவர் பண்டித நேருவின் கைகளை பலப்படுத்துவதன்மூலம் தாய் நாட்டுக்கு சேவை செய்ய முன்வரும்படி கேட்டுக்கொள்கிறேன்

சென்னைமாகாண ஐக்கிய முன்னேற்றக் கமிட்டியில் சேவை செய்ய கீழ்வரும் கனவான்கள் முன்வந்திருக்கிருர்கள். மேற்கொண்டும் அங்கத்தினர்களின் ஜாபிதா வெளியிடப்படும்.

1. ஸ்ரீ K. காமராஜ் 2. ஜனப் A M அல்லா பிச்சை (Ex-Officio) 3 ஜனப் S A ஹபீ முஹம்மத் சாஹிப் (Ex-Officio) 4. ஸ்ரீ G. ராமச்சந்திரன் 5 ஜனப் ஹாஜி M. ஜமால் முஹம்மத்சாஹிப் 6. ஜனப் ஹாஜி M. அப்துல் ரஹ்மான் சாஹிப் 7. ஜனப் ஸய்யத் ஜலாலுத்தீன் சாஹிப் 8 ஜனப் M. M. இஸ்மாயில் சாஹிப் 9. ஜனப் K K. போக்கர் சாஹிப் 10. ஸ்ரீ C R. பட்டாபிராமன் 11. ஜனப் அப்துல் ஜப்பார் சாஹிப் 12. ஜனப A. M. அலி இப்ராஹீம் சாஹிப், 13. மௌலான P. P. கமாலுத்தின் அஹ்மத் 14 ஜனப் C. S. சதக் தம்பி மரைக்காயர் 15. ஜனப் M. A. ரஹ்மான் பேக் சாஹிப் 16. ஜனப் புரொபஸர் ரவூப் பாஷா சாஹிப் 17. ஜனப் M. முகம்மது முஸ்தபா சாஹிப் 18 ஜனப் B. சுன்ன சாஹிப் 19. ஜனப் S அப்துல் காதிர் சாஹிப் 20 மௌலான அப்துல்மஜீத் சாஹிப் 21 மௌலான அப்துல்ஹகீம் சாகிப் 22. ஜனப் K. M ஷரீப் சாஹிப் 23. ஜனப் E K முஹம்மத் இஸ்மாயில் 24. ஜனப் அப்துல் கதீம் சாஹிப் 25. F. G நடேசய்யர் 26. ஹாஜி முஹம்மத் மௌலான சாஹிப் 27. M. A. சுப்பையா முதலியார் 28. ஜனப் ஷவ்கத் அலி சாஹிப் 29 M. ஜைனுல் ஆபிதீன் சாஹிப் 30. A. அஹ்மத் மீரான் சாஹிப் 31. ஜனப் V. S T முஹம்மது இப்ராஹீம் சாஹிப். 32. ஜனப் ஷேக்பீர் முஹம்மது சாஹிப் 33. ஜனப் முஹம்மது இலியாஸ் சேட் சாஹிப் 34. ஜனப் அப்துல் கபூர் சாஹிப் 35 ஸ்ரீமதி K. லக்ஷ்மி பாரதி M. L A. 36. ஜனப் முஹம்மத் அஸ்கர் அலி சாஹிப் 37. ஸ்ரீ T. S. வெங்கட்ராமன் 38 ஸ்ரீ R. வெங்கட்ராமன் (இந்திய ஸொஷலிஸ்ட் ஊழியன்) 39. ஸ்ரீ வீரராகவ அய்யர் 40. ஜனப் முஹம்மத் பிஜ்லி சாஹிப்

முஸ்லிம்கள் ஐந்தாம் படையல்ல.

—(காலித் லதீப் காபா, பார் அட் லா)—

இந்தியாவுக்கும் ஹைதராபாத்துக்கும் இடையே ஒருக்கால் யுத்தம் மூண்டால் இந்திய யூனியன் முஸ்லிம்கள் ஐந்தாம்படை வேலை செய்வரென்று சொல்லுவது அபாண்டமும் யோக்கியப் பொறுப்பற்றவகையில் பழி சுமத்துவதுமாகும். முஸ்லிம்கள் இந்தியாவை ஆதரிக்கவில்லை யென்று ஹைதராபாத் அதிகார வர்க்கம் நாலரைகோடி இந்திய முஸல்மான்களை நம்புவது பெரும் தவறு. இந்த உண்மையை துர்தசையில் அவர்கள் உணரப் போகின்றனர்.

பாகிஸ்தான் கோரிக்கையால் மிஸ்டர் ஜின்னா தூண்டிவிட்டதைப்போல் பீரார் கோரிக்கையாலும் இந்திய முஸல்மான்களின் உணர்ச்சியை தூண்டிவிட முடியுமென்று இத்திஹாதுல் முஸ்லிமீன் தலைவர்கள் நினைப்பது அவர்களுடைய அறியாமையையே காட்டுகின்றது. பாகிஸ்தான் கோரிக்கையும் பீரார் கோரிக்கையும் ஒன்றாக முடியாது. குறைந்தபட்சம் பாகிஸ்தான் கோரிக்கை ஒரு லட்சியமாகவாவது இருந்தது. நிஜாம் கோரிக்கை அவ்வளவுகூட இல்லை.

"தூங்கிக்கொண்டிருந்த சிங்கத்தை தட்டிஎழுப்பாமலிருந்திருந்தால் இந்தியாவுக்கு நலமாய் இருந்திருக்கும். தட்டி யெழுப்பப்பட்ட பிறகு ஹைதராபாத், காஷ்மீர், வங்காள சிங்கங்கள் மூன்றும் ஒருநாள் டில்லியில் வந்து சந்திக்காமலிருந்து விடுமென்று யார்தான்நினைப்பார்கள்?" என்றுஹைதராபாத் சையத் அப்துல் அலீம் பேசியதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா' வெளியிட்டிருக்கிறது.

வங்காள சிங்கம் இரண்டாக வெட்டுண்டு கிடப்பதை மிஸ்டர் அப்துல் அலீம் மறந்துவிட்டார் போலும். தலை வேறு உடல்வேறாக துண்டிக்கப்பட்டு கிடக்கும் சிங்கத்தின் நகங்களைப் பார்த்து யாரும் பயப்படமாட்டார்கள். அதனால் ஒன்றும் செய்ய முடியாது.

காஷ்மீர் சம்மந்தப்பட்டவரை அங்கு சிங்கங்களே இருக்கவில்லை. பூஞ்ச் பிரதேசத்தில் ஒருக்கால் சில சிங்கங்கள் உயிருடன் இருந்தால் இருக்கலாம். படுகாயங்களுடன் அவைகளும் உயிர்தப்பினால் போதும் என்று சிதறி ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஹைதராபாத் சிங்கத்தின் பாய்ச்சலைக் குறித்து கவலையில்லை. எவ்வளவுதூரம் பாயும் என்று நமக்குத்தெரியும். டில்லியோ வெகு தூலைவில் இருக்கிறது நடுவே குவாலியரும், இந்தூரும் இருக்கின்றன. சிங்க வேட்டையில் அனுபவம் மிக்க தேர்ச்சிபெற்ற வில்லாளிகள் அங்கு இருக்கின்றனர்.

காஸிம் ரஜ்வி, மிஸ்டர் அலீம் போன்றவர்களுக்கு உண்மையாகவே நிஜாமிடம் அக்கரை இருந்தால் தங்கள் பொருப்பற்ற பேச்சால் நிஜாமுக்கு நன்மை ஏற்பட முடியாதென்பதை உணரவேண்டிய தவசியம்.

முஸ்லிம் நலன்.

ஹைதராபாத்தை விட காஷ்மீரத்தில் இந்திய முஸல்மான்கள் அதிக அக்கரை கொண்டிருக்கின்றனர். காஷ்மீரில் நூற்றுக்கு தொண்ணூறு முஸ்லிம்கள் இருக்கின்றனர். அதற்கு நேர் மாறாக ஹைதராபாத்தில் நூற்றுக்கு தொண்ணூறு முஸ்லிமல்லாதார் இருக்கின்றனர். காஷ்மீரில் தங்களுடைய சகோதரர்களின் சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கும் இந்திய முஸ்லிம்கள் ஹைதராபாத்தில் வேறு வித கொள்கையை ஆதரிக்க முடியாது. அத்துடன் காஷ்மீரில் பெரும்பான்மை மக்கள் இந்திய யூனியனுடன் சேர முயற்சித்து வருவதையும், பாகிஸ்தானில் சேரவிரும்பாததையும், காஷ்மீர் முஸ்லிம்கள் அவ்விதம் முயற்சிப்பதற்கு இருந்துவரும் காரணங்களையும் இந்திய முஸல்மான்கள் உணர்ந்தே யிருக்கின்றனர். முஸல்மான்களின் நன்மையை உத்தேசித்தே காஷ்மீர முஸ்லிம்கள் இந்திய யூனியனுடன் சேர முயற்சிக்கின்றனர் என்று இந்திய முஸல்மான்களுக்கு நன்றாகத்தெரியும்.

இஸ்லாமிய ராஜ்யம்.

எப்படியோ ஹைதராபாத் சர்வாதிகாரி ஒரு முஸ்லீமாக இருப்பதால் மட்டும் ஹைதராபாத் இஸ்லாமிய ராஜ்யம் ஆகிவிடமுடியாது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் பொதுஜன அபிப்பிராயத்தின் சக்தி ஒருவருக்கும் தெரிந்திருக்கவில்லை. இன்று பெரிய பெரிய ராணுவ சக்திகளும் பொதுஜன அபிப்பிராயத்துக்கு முன் சக்தியற்றவைகளாகி விடுகின்றன. 'தடி எடுத்தவன் தண்டக்காரன்' என்ற பழமொழிக்கொப்ப ஆள்பலம் உடையவர்கள் அக்காலத்தில் எதேச்சாதிகாரிகளாய் விடுவது சாத்தியமாக இருந்துவந்தது. அதையொட்டி ஒரு சாம்ராஜ்யம் தகர்ந்தபொழுது நிஜாமின் மூதாதையரில்

ஒருவர் இரண்டு நூற்றுண்டுகளுக்கு முன் எதேச்சாதிகாரியாக மாறிவிட்டார்.

ஏறக்குறைய ஐந்நூறு எதேச்சாதிகாரிகள், ஹைதராபாத் நிஜாமை விட புராதன ராஜகுடும்பங்களைச் சேர்ந்த வாரிசுகள், இன்று திரண்டு வரும் பொதுஜன அபிப்பிராயத்தை தடுத்து நிறுத்துவது சாத்தியமில்லை என்ற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கின்றனர். சமஸ்தானுதிபதிகள் வாழ விரும்பினுல் மக்கள் ஆட்சியிலேயே அது சாத்தியம். புத்திசாலித்தனமுள்ள சமஸ்தானுதிபதிகள் தங்கள் வருங்கால விதியை பேசாமல் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

மற்ற சமஸ்தானங்களைப் போலல்லாமல் ஹைதராபாத் பிரச்னை தனி அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டுமென்று ஹைதராபாத் கேட்கின்றது சமஸ்தானங்களில் எல்லாம் ஹைதராபாத் முதல் நம்பரில் இருந்து வருவது உண்மையே மற்ற சமஸ்தானுதிபதிகளுக்கு இல்லாத பல உரிமைகளும் சலுகைகளும் ஹைதராபாத்துக்கு இருந்து வருவதும் வாஸ்தவமே. சமஸ்தானுதிபதிகளின் தான்தோன்றித்தனம் ஹைதராபாத்தில் இல்லையென்பதும் கல்வித்துறையிலும் இதரதுறைகளிலும் ஹைதராபாத் முன்னேற்றமடைந்திருப்பதும் வகுப்புவாதத்திற்கு இலக்காகாமல் நிர்வாகத்தில் மற்ற சமஸ்தானங்களை விட மிக உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்ததும் உண்மையே.

ஆயினும் இன்று ஹைதராபாத்தில் முழுக்க முழுக்க வகுப்புவாத விஷம் பரவி விட்டது. பாகிஸ்தான் எண்ணத்திற்கு ஹைதராபாத் ஊக்கமளித்திருக்கிறது ரஹ்மத் அலியின் திட்டத்தில் ஹைதராபாத் பாகிஸ்தானின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக இடம் பெற்றிருந்தது உஸ்மானிஸ்தான் பெயரால் ஹைதராபாத் பாகிஸ்தானின் மூன்ருவது அங்கமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது.

வங்காளத்திலும் பஞ்சாபிலும் முஸ்லிம் மெஜாரிடி அடிப்படையில் பாகிஸ்தான் கேட்கப்பட்டதற்கு மாருக ஹைதராபாத்தில் வார்சுரிமை அடிப்படையில் பாகிஸ்தான் கேட்கப்படுகிறது ஹைதராபாத் பாஸிஸ்டு தலைவர்கள் இன்றைக்கும் பாகிஸ்தான் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். பாகிஸ்தான் படத்தில் தாங்களும் இல்லாமல் இருப்பதைப் பார்த்து அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது உண்மையில் பாகிஸ்தான் எப்படியிருக்குமென்று அனுபவிக்காததாலேயே அவர்கள் அவநம்பிக்கைக்கு இலக்காகிவிட்டனர்.

முஸ்லிம்களின் அனுபவம்.

இந்திய முஸல்மான்கள் இனி வகுப்புவாத அடிப்படையில் வேறு எந்த ஆட்சியும் அமைவதை விரும்பவில்லை. பாகிஸ்தானில் நடந்ததற்கு கிழக்குப்பஞ்சாப் நிரபராத முஸ்லிம் அனுதைகள் முழு விலையையும் கொடுத்து தீர்த்துவிட்டனர். இந்திய சர்க்காரின் கடுமையான நடவடிக்கையும், மஹாத்மா காந்தியின் தியாகமும் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இந்திய முஸல்மான்கள் இன்னும் அதிகவிலை கொடுக்க வேண்டியிருந்திருக்கும். இனி இந்திய முஸல்மான்களை ஏமாற்ற முடியாது.

நிஜாமின் கடமை.

பொது மக்களிடம் ஹைதராபாத் ஆட்சியை உடனடியாக ஒப்படைப்பதே இந்திய முஸ்லிம் சகோதரர்களுக்கு நிஜாம் செய்யக்கூடிய சிறந்த சேவையாகும். இந்திய முஸல்மான்களுக்கு மட்டுமின்றி தனக்கும், தன்னுடைய குடும்பத்தினருக்கும் செய்த பெருஞ் சேவையாகவும் இருக்கமுடியும்.

(6-ம் பக்க தொடர்ச்சி)

சீக்கியர்கள் பஞ்சாப் பிரிவினையைக் கோரினர். ஹிந்து மஹாசபை வங்காளப்பிரிவினை கோஷம் கிளப்பிற்று. தேச மக்களே தேசத்தின் பிரிவினையைக் கோர முற்பட்டு விட்ட பிறகு மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பது காங்கிரஸுக்கு எங்ஙனம் சாத்தியமாக முடியும். எனவே இந்திய தேசிய காங்கிரஸ் மஹாசபையும், தன்னுடைய பிரகாசமான சரித்திரத்தில் ஒரு குறைபாட்டுக்கு இடமளித்து விட்டது காங்கிரஸ் காரர்கள் மனப்பூர்வமாக அதற்கு தயாராக இருக்கவில்லை தாங்கள் தவறிச் செல்வதாக அவர்கள் ஒப்புக் கொள்ளத்தான் செய்தனர்.

ஜமீயத்துல் உலமா பிரிவினையை ஒப்புக் கொள்ளும் விஷயத்தில் காங்கிரஸுடன் ஒத்துழைக்க மறுத்து விட்டது. லக்னோவில் கூடிட ஜமீயத் கூட்டத்தில் காங்கிரஸின் விசித்திரமான போக்கு கண்டிக்கப்பட்டது. ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக பிரிவினைப் பற்றி முடிவு செய்து விட்டவர்கள் கையிலேயே அதிகாரமும் இருக்கச் செய்தது.

(பாக்கி அடுத்த இதழில்)

மௌலானா ஹபீபுர் ரஹ்மான் மணிமொழிகள்

நம் விசுவாசத்தை நேரு பரீக்ஷிக்கட்டும்.

ஜமீயத்துல் உலமா அரசியல் நடவடிக்கைகளிலிருந்து விலகுவதை மௌலானா ஹபீபுர் ரஹ்மான் தெளிவுபடுத்தினர். நாம் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி அடையவும் முயற்சித்தோமென்றால் வெள்ளையர்கள் சொல்லிக்கொடுத்திருந்த வகுப்புவாத பாடத்தை எதிர்ப்பதே நம் நோக்கம். சர்ச்சிலும், வெள்ளையர்களும் காங்கிரஸை ஹிந்துஸ்தாபனம் என்று நினைத்திருந்தபோது தேசிய முஸ்லிம் ஸ்தாபனங்களை சுட்டிக்காட்டித்தான் முஸ்லிம்களும் காங்கிரஸுடன் இருந்து வருகின்றனர் என்று பதிலளிக்கப்பட்டு வந்தது.

நாம் இன்று புதிதாக ஒன்றையும் சொல்லவில்லை. சுதந்திரத்துக்காக மாபெரும் தியாகங்கள் நாமும் செய்திருக்கிறோம். சிறைக்குச் சென்றோம். துப்பாக்கிகளுக்கு இலக்கானோம். எங்கள் தாடிகள் பிடுங்கப்பட்டன. நம் இனத்தவர்கள் கையினாலேயே செருப்படியும் பட்டோம். இன்று நாம் கூடியிருப்பது குறை கூறுவதற்காக அல்ல அபிப்பிராயங்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளவே இங்கு வந்திருக்கிறோம்.

இதற்கு முன் சொல்லி வந்ததையே மீண்டும் எடுத்துச்சொல்ல வந்திருக்கிறோம். புதிதாக நாம் ஒன்றும் சொல்லப்போவதில்லை. நேற்றுவரை நம்மீது கோபம் கொண்டிருந்தவர்களின் முகங்களில் இன்று அமைதி யின்மை குடிகொண்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் எதைச்சொன்னாலும் நாம் மன்னிக்கத்தான் வேண்டும். அவர்கள் இன்று குறைகூறப்படுவதற்கும் லாயக்காக இருக்கவில்லை.

தேசத்தின்கூட்டு நலனுக்காக ஒன்றுபட வேண்டியது தான் இன்றுள்ள அவசியம். வேறுபட்டதேவைகளால் நாம் பிரிக்கப் பட்ட பிறகு முஸ்லிம்கள் முன்னேற்றமடைவது சாத்தியமில்லை. நாம் தேசத்துக்கு மட்டுமின்றி மனித வர்க்கத்துக்கும் சேவை செய்து சத்தியம் வெற்றியடைய உழைக்க வேண்டும்.

எதுவரை நாட்டின்நலன் தேசியத்துடன் பிணைக்கப்பட்டிருக்குமோ, எதுவரை தேசியம் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்குமோ அதுவரை நாம் தேசியத்தை ஆதரிப்போம். மேல்நாடுகளைப் போல் தேசியம் அழிவை நோக்கிச் சென்றால் ஜெர்மனி, பிரான்ஸில் நடத்த கொலை, கொள்ளைகளைப்போல் காட்டுமிராண்டித்தனமும் அக்கிரமும் நடக்க ஆரம்பித்துவிட்டால் அப்பேர்பட்ட தேசியத்தை நாம் தீர்த்துக்கட்டிவிடுவோம்.

மதமும், அரசியலும்

மதத்துடன் அரசியலை சேர்த்துப் பேசினால் அரசியலில் நேர்மை, நியாயம், நீதி இருக்க வேண்டுமென்பதே அதற்கு அர்த்தம். அரசியலிலிருந்து நேர்மை போய்விடுமா! மகாத்மா காந்தி நேர்மையை அரசியலில் புகுத்தவேபாடுபட்டார். தன்வாழ்நாள் முழுதும் உழைத்து முடிவில் அதற்காகவே உயிரையும் அர்ப்பணித்தார்.

அரசியலிலிருந்து நேர்மை நீங்கிவிட்ட பிறகு காட்டுமிராண்டித்தனம், மிருகத்தனம், மாத்திரமே மிஞ்சியிருக்கும். அரசியலிலிருந்து ஒழுக்கம், கண்ணியம், நேர்மை நீக்கப்பட்டதன் பலனைத்தான் வங்காளம், பஞ்சாப், டில்லி முதலிய மாகாணங்களில் நடந்தேறிய சம்பவங்கள் நடந்தன.

'நாம் பாடுபட்டதெல்லாம் பருப்பாகி விட்டது' என்று நான் காந்திஜியிடம் சொல்லி வருத்தப்பட்டேன். 'பருப்பாயிருந்தாலும் பரவாயில்லை, மேஜைமீது உட்கார்ந்து சாப்பிட உதவும். இதுவோ நாறிப்போய் விட்டது' என்று மகாத்மா காந்தி பதிலளித்தார். மகாத்மாஜி ஏன் கொல்லப்பட்டார்? அரசியல் நேர்மை இழந்துவிட்டதே அதற்குக் காரணம்.

கடந்த முப்பது வருஷங்களாக ஜமீயத்துல் உலமா வகுப்பு வாதத்தை எதிர்த்து போராடி வருகின்றது. முப்பது வருஷங்களுக்குமுன் சொல்லி வந்ததையே இன்றைக்கும் நாம் சொல்லுகிறோம்.

இந்தியாவில் முஸ்லிம்லீக் புதைக்கப்பட்டுவிட்டது. முஸ்லிம்கள் அனாதைகளாகி விட்டனர். அதற்கு பதிலாக சேவக்சங்கம், மஹாசபை, அகாலிதளம் தலைதூக்கி புதிய துன்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. 1942-ல் காங்கிரஸை குழிதோண்டிப் புதைக்க பாடுபட்ட ஸ்தாபனங்களின் இன்றைய நிலைமையைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன்.

நாம் வகுப்புவாதத்தை இன்னும்பிடித்துக்கொண்டிருந்தால் கிடைத்த சுதந்திரத்தையும் இழக்க நேரிடும் வகுப்புவாத விஷத்தைக்குடித்த முஸ்லிம்கள் அடைந்த கதி பார்த்தாயிற்று.வகுப்புவாதத்தின்பயனை சீக்கியர்கள் அரசியல் அந்தஸ்தை இழந்துவிட்டனர். இன்று அதே விஷத்தை சில ஹிந்துக்கள் கையிலேந்தி நிற்கின்றனர். ஒரே ஒரு முடக்கு குடித்ததன் பலனை மகாத்மா காந்தியின் கொலை போன்ற திடுக்கிடத்தக்க சம்பவம் நடந்தேறிவிட்டது.

முஸ்லிம்கள் மீது கருணை காட்டும்படி நான் கேட்கப்போவதில்லை. ஒரு சமூகம் நிலைத்திருக்க வேண்டுமானால் மற்றவர்களின் தயவின்பேரில் அல்ல தன்னுடைய நேர்மை,ஒழுக்கம்,சக்தியைக்கொண்டே நிலைத்திருக்க முடியும். ஹிந்துக்களிடம் நான் தயவுக்காக அப்பீல் செய்யவில்லை. அடங்கி வாழ்தல் நய வஞ்சகமும் நீசத்தனமுமாகும்.

கண்ணியமான மனிதனைப்போல் தங்களுடைய தவறை உணர்ந்து முஸ்லிம்கள் நேர்மைமிகுந்த நண்பர்களைப்போல் கௌரவமாக வாழ்வார்கள். இந்த நாட்டை புனர் நிர்மாணம் செய்ய முஸ்லிம்களின் சேவையும்தேவை. நம்முடைய ஒத்துழைப்பைப்பெற பெரும்பான்மையோர் ஆவலாக இருக்கின்றனர். எல்லோருக்கும் பொதுவான காங்கிரஸ் ஸ்தாபனத்துடன் சேர்ந்து உழைத்து சுதந்திரத்திற்காக மாபெரும் தியாகங்களையும் செய்திருக்கின்றோம். இன்று சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டியதும் நம் கடமை.

ஹிந்துக்கள் வகுப்புவாதத்தைக் கைவிடவில்லையேல் இந்திய சுதந்திரம் பறிபோவது மட்டுமின்றி ஆசிய சுதந்திரமும் இழக்கவே நேரிடும். ஆசிய சுதந்திரத்திற்கு உத்திரவாதம் அளிக்கக்கூடிய காவலாளியாகவே இந்தியா இருக்கின்றது. சிந்தனையை செப்பனிட்டு கண்ணியமான பெரும்பான்மையினராகஎல்லா சிறுபான்மையினரையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டு போகவேண்டியது ஹிந்துக்களின் கடமை.

ஜனமாற்றத்தை ஒப்புக்கொண்டதன் மூலம் காங்கிரஸ் தேசீய முஸ்லிம்களை பணயம் வைத்துவிட்டது என்று நான் மகாத்மா காந்தியிடம் சொன்னேன். 1857-ல் நம்முடைய நிலங்களை வெள்ளையர்கள் பிடுங்கிக் கொண்டனர் இன்று நீங்கள் நம்முடைய வீடுகளை எடுத்துக் கொண்டீர்கள். இனி நம் நிலைமை என்னவாகும் என்பது தான் புரியவில்லை.

கொள்ளை யடிக்கப்பட்டதைக் குறித்துக் நான் வருந்த வில்லை நாடு எவ்விதத்திலும் பலமடைய வேண்டுமென்றே நாம் பிரார்த்திக்கிறோம். நாம் மற்றவர்களை எதிர்பார்க்காமல் மற்றவர்கள் நம்மை எதிர்பார்க்கும் அளவுக்கு நாடுபலமடைய வேண்டும். அந்த பொருப்பு இன்றைய நிலைமையில் ஹிந்துக்களையே சேர்ந்திருக்கிறது. முஸ்லிம்களுக்கு இல்லை. வகுப்புவாத விஷபானத்தை கையிலேந்தி நிற்கும் ஹிந்துக்கள் இனி என்ன செய்யப் போகின்றார்கள் என்பதைப் பொருத்தே யெல்லாம் இருக்கின்றது.

ஆச்சார்ய கிருபலானி விசுவாசம் விசுவாசம் என்று ஆலாபனை செய்கின்றார். விசுவாசத்தை நிரூபித்துக் காட்டுங்கள் என்று ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களைக் கேட்கின்றார். ஆனால் முதலில் தன்னுடைய விசுவாசத்தை நிரூபித்துக் காட்டும்படி நாம் கிருபலானியைக் கேட்கிறோம். நாம் சமூகத்தினரின் எதிர்ப்பையும் லட்சியம் செய்யவில்லை. அவர்களுடைய கோபத்தையும் சகித்தாய் விட்டது. உங்கள் விசுவாசத்தால் ஆகப்போவது ஒன்றுமில்லை நீங்கள் கேட்கும் விசுவாசம் நாட்டுக்காக அல்ல.உங்கள் சமூகத்தினரிடம் செல்வாக்கு பெறுவதற்குத்தான் என்பது நமக்குத் தெரியும்.

பட்டாளத்தில் 50 லக்ஷம் முஸ்லிம்களாவது சிப்பாய்களாக சேர்ந்து எதிரிகளை எதிர்த்து அணிவகுத்து நின்று இந்திய சுதந்திரத்தைக் காப்பாற்ற வீரப்போர் புரியும் அந்த சமயத்தில் நம்முடைய விசுவாசம் பரீட்சிக்கப் படப் போகின்றது கையில் தடியை வைத்துக் கொண்டு முஸ்லிம்களை விரட்டிக் கொண்டிருப்பது விசுவாசத்தைக் காட்டுவதல்ல.

அப்படியே பரீட்சிக்க வேண்டுமானாலும் பண்டித ஜவஹர்லால் நேரு அதைச் செய்யட்டும். அந்நியன் யாராவது இந்தியாவை கண்ணெடுத்துப் பார்த்தால் அன்று நாம் நம்முடைய விசுவாசத்தைக் காட்டுவோம். எந்த ஒரு இலாக்காவிலும் முஸ்லிம்களின் அவசியமில்லையென்று சொல்லப் படும் இன்று நம்முடைய விசுவாசம் பரீட்சிக்கப் படுகின்றதா !

ஐந்து கோடி இந்திய முஸல்மான்களும் காங்கிரஸில் சேர்ந்து விட்டால் காங்கிரஸூம் இருந்து வரும் காங்கிரஸில் முஸ்லிம்கள் சேர்ந்து இந்திய சுதந்திரத்தைக் காக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கும் வரை முஸ்லிம்களும் இருந்தேவருவர். இன்று முஸ்லிம்கள் வீடுகளுக்குள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதை விட்டு காங்கிரஸிலோ சோஷியலிஸ்டு கட்சியிலோ சேர்ந்து விடவேண்டும். எப்படியும் வகுப்பு வாதத்தை விட்டால் அதுவே போதும்.

"வரனிஷ்"
கரப்பான்; சொறி சிரங்கு,
பித்தவெடிப்பு, முகப்பருவிற்குச்
சிறந்தது.
மணி நேஷனல் பார்மஸி,
காரைக்குடி,

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.